**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 592 **நாள்:** 20.10.2026

**மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.க.விக்னேஷ் அவர்கள், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.க.விக்னேஷ் அவர்கள், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இன்று (20.10.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள், பெருங்குடி மண்டலம், வார்டு-183க்குட்பட்ட மாயன் பாலத்தின் கீழுள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-182க்குட்பட்ட எஸ்டேட் 3ஆவது தெருவில் மழைநீர் வெளியேறும் சிறு துளைகளில் நீர் செல்வதைப் பார்வையிட்டு உடனுக்குடன் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, கௌனால்புரம், அம்பேத்கர் நகரில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, வார்டு-189க்குட்பட்ட ரேடியல் சாலையில் உள்ள குறுக்குக் கால்வாயில் நீர் வெளியேறும் இடத்தில் உள்ள சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் குழாய் பதிக்கும் பணி நடைபெறுவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், பெருங்குடி மண்டலம், வார்டு-187ல் வீரங்கல் ஓடையிலிருந்து உபரி நீரைப் பாலாஜி நகருக்கு அனுப்பும் நீரேற்று நிலையத்தின் செயல்பாடுகளையும், கொட்டிவாக்கம் இளங்கோ நகர் கால்வாயில் நீர் சீராகச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சோழிங்கநல்லூர் மண்டலம், ஒக்கியம் மடுவு பாலப் பகுதியில் உள்ள கால்வாயில் நீர் சீராகச் செல்வதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருமதி மகேஷ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., (பெருங்குடி), திரு.தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., (சோழிங்கநல்லூர்), தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**